IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 111 /2013
Deposition of witness for DW3

Name : முருகேசன் Caste : -

Father's Name: கெஜராஜ் Calling : -

Village : நாகல் கிராமம் Religion : இந்து

Taluk : - Age : 56

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 7 day of December , 2018.

Chief Examination

சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். நான் திருமுருகன் வித்யாலாயா என்கிற நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியை நடத்தி வருகிறேன். எனக்கு பூர்வீகம் நாகல் கிராமம் தான். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள ஞானசேகரன் அவருடைய தாயாரும் முதல் பிரதிவாதியுமான ஈஸ்வரியம்மாள் மற்றும் அவருடைய சித்தப்பாவான 2-ம் பிரதிவாதியான சந்திரன் ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் என்பதால் அவர்களை தெரியும். வாதியின் தகப்பனார் காலஞ்சென்ற கோவிந்தராஜ் என்பவரை எனக்கு தெரியும். நான் பார்த்துள்ளேன். கோவிந்தராஜ்க்கு ஞானசேகரன் என்பவர் ஒரே மகன் ஆவார். பெண்பிள்ளைகள் உள்ளனரா என்பது குறித்து எனக்கு சரியாக தெரியாது. வாதியின் குடும்பத்தாரும், 2-வது பிரதிவாதியும் ஏக குடும்பமாக இருந்தது கிடையாது. தனித்தனியாக தான் இருக்கின்றனர். வாதி மற்றும் 2-ம் பிரதிவாதிக்கு விவசாயந்தான் தொழில். அவர்கள் இருவரும் அவர்களது நிலங்களை தனித்தனியாகத்தான் அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் எந்தெந்த நிலங்களை அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். சொத்துக்கள் அனைத்தும் கரியகவுண்டர்பட்டி நாகல் பஞ்சாயத்தில் உள்ளது. எனக்கு தற்பொழுது 56 வயதாகிறது. வாதியின்

தகப்பனாருக்கும், 2-வது பிரதிவாதிக்கும் இடையே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. நான் அப்பொழுது சிறுவனாக இருந்தேன். எனினும், கடந்த 30லிருந்து 40 வருடகாலமாக வாதியின் குடும்பம் மற்றும் பிரதிவாதியின் குடும்பத்தார் ஆகிய இருகுடும்பத்தாரும் தனித்தனியாகத்தான் நிலங்களை அனுபவித்து வருகின்றனர். கோவிந்தராஜ் அவரது சொத்துக்களில் சிலவற்றை 2-வது பிரதிவாதி சந்திரனுக்கும், சில சொத்துக்களை ஒரு மகாதேவ கவுண்டர் என்பவருக்கும் விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சொத்துக்கள் விற்கப்பட்ட நபர்களிடமே தற்பொழுதும் உள்ளது. வாதி மற்றும் 2-ம் பிரதிவாதி தனித்தனியாக ஊரில் வசித்து வருகிறார்கள்.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.